# ஆதன வரியை பெற்றுக் கொள்ளுதல்

குறிப்பிட்ட ஆதன வரி வலயத்துக்குள் அமைந்துள்ள நிலையான சொத்துக்களுக்கான ஆதன வரியை செலுத்துவதற்கு சொத்தின் உரிமையாளர் கடமைப்பட்டுள்ளார்.

அதை செலுத்துவது எப்படி?

01

ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் மாநகர ஆணையாளர் அல்லது செயலாளரால் மதிப்பீட்டு அறிக்கையொன்று உங்களுக்கு வழங்கப்படும். இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள சொத்தின் வருடாந்த பெறுமதி தொடர்பாக எதிர்ப்பை முன்வைப்பதற்கு முடியுமென்பதை வர்த்தமானி அறிக்கையிலும் பத்திரிக்கையிலும் அறிவிக்கப்படும்.

02

ஒவ்வொரு வருடமும் நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் ஜனவரி 31 ஆம் திகதி வரையான காலத்துக்குள் அதற்கான எதிர்ப்பை முன்வைப்பதற்கு உங்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

03

ஆதன வரி தொடர்பான அறிக்கையை ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன் சொத்து உரிமையாளருக்கு அல்லது வதிவிடருக்கு வழங்கப்படும்.

04

ஆதனவரி அறிக்கை கிடைத்த பின் எந்நேரத்திலும் இணையத்தளத்தின் ஊடாக அல்லது வார நாட்களில் சேவை கருமபீடத்திற்கு சென்று அந்த வரிப்பணத்தை செலுத்த முடியும்.

05

வரிப்பணத்தை முன்கூட்டி செலுத்துபவருக்கு கழிவு வழங்கப்படுவதோடு செலுத்தவேண்டிய பணம் இருந்தால் அதையும் செலுத்த வேண்டும். பெற்றுக்கொண்ட பணத்துக்கு உங்களுக்கு பற்றுசீட்ரொன்று வழங்கப்படும்.

06

சொத்தின் வருடாந்த மதிப்பீடு தொடர்பாக நீங்கள் எதிர்ப்பை தெரிவித்திருந்தாலும் வருடாந்த வரிப்பணத்தை செலுத்த நீங்கள் கட்டுப்பட்டுள்ளீர்கள்.

எதிர்ப்பு ஆராய்வின் போது மதிப்பீடு குறைந்திருந்தால் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணத்தை எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய பணத்திலிருந்து குறைக்கப்படும்.

Funded by European Union

UNDP

STRIDE | CDLG Capacity Development of Local Governments